III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE.

O.S.241/2021

Deposition of witness for the Plaintiff/PW1
solemnly by Thiru.M.Muthupandi, Junior Assistant,
in accordance with the provision of Act I for 1873 on 20-07-2026

| | | | |
|---|---|---|---|
| Name | : கார்த்திகேயன் | Village | : |
| Father's / Husband's Name | : அன்பரசு | Calling | : |
| Age | : | Taluk | : |

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

(சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு 1 வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.)

நான் பாலகிருஷ்ணனுக்கு கொடுத்ததாக சொல்லப்படும் பணத்தை எந்த தேதியிலிருந்த எந்த தேதிவரை கொடுத்தேன் என்றால் 2016 லிருந்து 2017 வரையிலான காலகட்டத்தில் கொடுத்தேன். நான் இந்த காலகட்டத்தில் எந்தெந்த தேதிகளில் பணம் கொடுத்தேன் என்று குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் சுமார் நான் 8 லிருந்து 10 தேதிகளில் இந்த தொகைகளை கொடுத்தேன். இது பற்றி என்னுடைய வழக்கில் குறிப்பிட்டிருக்கின்றேன். இவ்வாறு நான் கொடுத்ததாக சொல்லும் தொகைகளை வங்கி கணக்கு மூலமாக கொடுத்தேனா அல்லது ரொக்கமாக கொடுத்தேனா என்றால் சுமார் 7 முறை வங்கி கணக்கு மூலமாக கொடுத்தேன். 2 முறை ரொக்கமாக பணம் கொடுத்தேன். நான் தாக்கல் செய்திருக்கின்ற வழக்குரையில் எந்த இடத்திலாவது 2016 லிருந்து 2017 வரை 7 லிருந்து 10 தடவை கொடுத்த பண விவரத்தை சொல்லியிருக்கிறேனா என்றால் சாட்சி வழக்குரையை பார்த்து ஆம் வழக்குரையில் சொல்லப்படவில்லை, ஆனால் அக்ரிமெண்டில் சொல்லப்பட்டிருக்கின்றது. 2016 லிருந்து 2017 வரையிலான கால கட்டத்தில் பாலகிருஷ்ணனுக்கு எவ்வளவு தொகை மொத்தமாக கொடுக்கப்பட்டது என்றால் 85 லட்சம் கொடுக்கப்பட்டது. 2016-2017 ஆண்டுவாக்கில் இவ்வாறு பாலகிருஷ்ணனிடம் 85 லட்ச ரூபாய் கொடுத்ததற்கு அந்த கால கட்டத்தில் அவரிடமிருந்து ஏதாவது ஆவணம் எழுதி

வாங்கினேனா என்றால் காசோலை அந்த டயத்தில் செக் வாங்கியிருந்தோம். அதன்பிறகு தான் அக்ரிமெண்ட் போடப்பட்டது. அந்த காசோலை வங்கியில் செலுத்தப்பட்டதா என்றால் செலுத்தப்படவில்லை. இந்த காசோலைகள் நிரப்பப்பட்ட காசோலைகளா அல்லது நிரப்பப்படாத காசோலைகளா என்றால் தேதி போடாமல் நிரப்பப்பட்டிருந்த காசோலை. இவ்வாறு பாலகிருஷ்ணன் காசோலை கொடுத்தார், அதனை வங்கியில் போடவில்லை என்று இந்த வழக்கில் சொல்லியிருக்கின்றேனா என்றால் சொல்லவில்லை. அந்த காசோலையை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

(அறிவார்ந்த 1வது பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).